[1972 ஆகஸ்ட் 21

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஈ.எஸ்.ஐ. கார்ப்பொரேஷன் அதற்கு வேண்டிய நிதியினைத் தருவதற்கு முன்வரவில்லை. எனவே தடைப்பட்டிருக்கிறது.

Labour Welfare Board.

* 141 *Q.*—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the works taken up by the Labour Welfare Board so far; and

(*b*) the works proposed to be taken up further?

தொழிலாளர் நல வாரியம்

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொழிலாளர் நல வாரியம் தற்போதுவரை மேற்கொண்ட பணிகள் யாவை?

(இ) மேலும் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ள பணிகள் எவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் தேவையான பணியாளர்களுடன் மூன்று தொழிலாளர் நல நிலையங்கள் முறையே 15—1—1972, 14—1—1972, 21—2—1972 ஆகிய நாட்களில் தொடங்கப்பட்டன. தொழிலாளர்களின் மனைவியர்க்குத் தையற்கலை வகுப்புகளும் தொழிலாளர் குழந்தைகளின் நலனுக்காக பாலர் பள்ளிகளும் நடத்துவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(இ) சென்னை, செம்பியத்தில் அல்லது செம்பியம் போன்று தொழிலாளிகள் அதிகம் வசிக்கும் இடங்களில் தொழிலாளர்களுக்கு விளையாட்டு அரங்கம் ஒன்றைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னையில் தொழிலாளர் நிறுவனத்தையும் தொழிலாளர் நலப் பிரிவையும் தொடங்குவதற்கான செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.